இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
வழங்கும்

கதம்பம்

ஆகஸ்ட் 2022

இந்த இதழில்...

- அறிவிப்பு மடல்
- திரையும் இசையும் (ராகம்: ஸரஸாங்கி)
- குறளும் பொருளும்
- கடிலக்கரையினிலே - பண்ருட்டி பலாச்சுளைகள் (பாகம் 5)
- எனது பார்வையில் அமெரிக்கா
- கவிதைக்குவியல்
- திரைப்பட விமர்சனம் (டார்லிங்ஸ் - ஹிந்தி)
- தமிழ்ப்பள்ளி மாணவர்கள்
- உடல்நலக் குறிப்பு
- வாசகர் கருத்து படிவம்

அறிவிப்பு மடல்

செப்டம்பர் மாதத்தில் வரவிருக்கும் தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள்:

9/10/22 மற்றும் 9/11/22 - பெண்களின் எறி பந்து போட்டி (Women's Throwball Tournament)

அறிவிப்பு மடல்

9/17/2022 மற்றும் 9/18/22 - ஆண்களின் கைப்பந்து போட்டி (Men's Volleyball Tournament)

அறிவிப்பு மடல்

9/24/22 - குழந்தைகளுக்கான கலாச்சார நிகழ்ச்சி இந்து சென்டரில் மாலை 4:30 முதல் 7:30 வரை

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

திரையும் இசையும் - ஸரஸாங்கி

இது **27** ஆம் மேளகர்த்தா ராகம். இதற்கு சௌரசேனா என்று மற்றோரு பேரும் உண்டு. கமலா மனோகரி, வாசந்தி, நளினகாந்தி ஆகிய ராகங்கள் இந்த ராகத்தின் ஜன்ய ராக பட்டியலில் அடங்கும்.

இந்த ராகத்தில் பிரபலமான பாடல்கள் என்று எடுத்துக்கொண்டால் ராமசாமி சிவன் இயற்றிய **நீகேல தயராது**, பலமுரளிகிருஷ்ணா அவர்களின் **வந்தேஹம் கோவிந்தா**, முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களின் **சௌரசேனேஷம் வல்லீஷம்**, ஸ்வாதி திருநாள் மஹாராஜா இயற்றிய **ஜெயா ஜெயா பத்மநாபா** போன்ற பாடல்கள் ஆகும்.

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த பாடல்களில் சில:

திரைப்படம்	பாடல்	இசையமைப்பாளர்
அழகு நிலா	மனிதன் எல்லாம் தெரிந்து	கே வி மஹாதேவன்
உயர்ந்த மனிதன்	பால் போலவே	எம் எஸ் விசுவநாதன்
ராஜாதி ராஜா	மீனம்மா மீனம்மா	இளையராஜா
கடல் மீன்கள்	என்றென்றும் ஆனந்தமே	இளையராஜா
பெரிய வீட்டு பணக்காரன்	மல்லிகையே மல்லிகையே	இளையராஜா
பெரிய வீட்டு பணக்காரன்	முத்து முத்து மேடை போட்டு	இளையராஜா
சதி லீலாவதி	மஹராஜனோடு	இளையராஜா
மனித ஜாதி	புதுசு புதுசு	இளையராஜா
அதிசய பிறவி	தானந்தன கும்மி	இளையராஜா
ரோஜா	தமிழா தமிழா	ஏ ஆர் ரஹ்மான்
பரசுராம்	சிட்டு குருவி	ஏ ஆர் ரஹ்மான்
விடுகதை	இதயம் இதயம்	தேவா
விசுவாசம்	கண்ணான கண்ணே	டி இம்மான்

தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்

குறளும் பொருளும்!

{துட்டு கொடுத்தாவது அந்தத் துன்பத்தை வாங்கிக்கோ - வள்ளுவர்}

உலகத்துல யாராச்சும் இப்படிச் சொல்லி கேள்விப்பட்டு இருக்கியா?

டேய், ஒரேடியா கதை விடாதே. அப்படியெல்லாம் சொல்லியிருக்க வாய்ப்பில்லை.

அட, உண்மையாத்தான் சொல்றேன். வள்ளுவர் ஒரு so called "துன்பத்தை" ("கேடு" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்) அடைய பொருள் (காசு, பணம், துட்டு, மணி மணி) கொடுக்க வேண்டி இருந்தாலும் பரவாயில்லை; பொருள் கொடுத்தாகிலும் அதைப் பெறு என்கிறார். அது என்னவாக இருக்கும்? யோசிச்சுப் பாரேன்.

எவ்ளோ யோசிச்சாலும் தோணலைடா. நீயே சொல்லிடு.

சரி. சொல்றேன்.
ஐயன் மனிதர்கள் எல்லோரையும் நேசித்தவர். ஒருத்தருக்கு ஒருத்தர் உதவணும், நமக்குத் தீங்கிழைத்தவருக்கும் அவர் நாண நல்லதே செய்யணும் என்ற பெரிய மனசுக்காரர். சமூகம் ஒற்றுமையாக இருக்க எல்லோருக்கும் உதவி செய்யும் மனம் வேண்டும் என்கிறார். நாம் சம்பாதித்த அறிவு, பொருள் மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்று நினைக்கிறார். தன்னலம் இன்றி பொதுநலனுக்காக செய்வதை இன்றைய பேச்சுவழக்கில் 'தொண்டு செய்வது' என்கிறோம் இல்லையா? அதைச் சொல்கிறார்.

தொண்டு-ன்னு பொதுவா சொல்லிடறோம். எதையும் எதிர்பார்க்காமல் தங்கள் அறிவு, நேரம், உழைப்பு என தொடர்ச்சியாக பொது நோக்கத்துக்காகக் கொடுப்பது என்பது அவ்ளோ எளிதானது அல்ல. சொல்லிடலாம்; செஞ்சு பார்த்தாதான் அதில் உள்ள சிக்கல்கள் தெரியும். பல நேரங்களில் எப்படா முடியும் என்று "துன்பமாக" தோன்றும்.
கொஞ்சம் அப்படி-இப்படி இடைஞ்சலாக, துன்பமாக இருந்தாலும் நீ செய்யும் செயல் பொது நலனுக்காக. கைமாறு எதிர்பாரா சேவை செய்கிறாய். நீ செய்யும் செயலால் சில-பலர் நன்மை அடையப் போகிறார்கள். இப்படியான செயலைச் செய்ய ஒரு வேளை, உன் கைப்பொருளை செலவழிக்க வேண்டி இருந்தாலும் தயங்காதே. தொண்டு செய்யும் ஒருவனுக்கு இதனால் கேடு வந்தாலும் பரவாயில்லை, செலவழித்தாகிலும் அந்தத் "துன்பத்தை" அடைந்திட வேண்டும் என்கிறார்.

உண்மையில், பொது நலனுக்குப் பாடுபடுவது இன்பமான ஒன்று; அப்படிச் செயல்படும் போது வரும் சிக்கல்களும் இடைஞ்சல்களும் கூட துன்பம் கிடையாது என்ற மறைபொருள் (hidden message) கொண்ட குறள் அது.

எங்கள் ஆசிரியர் அடிக்கடி சொல்வார்: "திருக்குறள் சந்தன மரம் போல. தேய்க்கத் தேய்க்க மணக்கும்" என்று.

யோசிச்சுப் பாரேன். ஏழே சொற்களில் இவ்வளவு அடர்த்தி.
வாவ்.
ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து
'ஒப்புரவு அறிதல்' என்ற அதிகாரத்தில் உள்ள ஒரு குறள் இது. ஒப்புரவு என்ற சொல்லே வியப்புக்குரிய ஒன்று.

ஒப்பு = சமம்.
ஒப்புரவு = பிறரையும் தனக்குச் சமமாகக் கருதி உதவுதல்.

குறளை எளிமையாகப் படித்தால்,

ஒப்புரவால் ஒருவனுக்கு கேடு வரும் என்றால்,
அந்த "கேடு" விலை கொடுத்து கூட பெறும் தகுதி படைத்தது.

இந்த முழு அதிகாரமுமே இப்படித்தான் இருக்கும். படித்துப்பார் சொக்கிப் போவாய். இதில் இருக்கும் பத்து குறள்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது போல எழுதியிருப்பார்.

கைமாறு (பதில் உதவி) எதிர்பார்த்தா மழை பெய்யுது? அது போல எதையும் எதிர்பாராது செய்; உன்னிடம் உள்ள பொருள் எல்லாம் தொண்டாற்றவே, தயங்காமல் செய்; தொண்டாற்றவது போன்ற நல்ல செயல் எந்த உலகிலும் இல்லை.
நாம் உயிரோடு இருப்பதே எதையும் எதிர்பாராது பொதுச் சேவை செய்யவே. நல்ல உள்ளம் கொண்ட உன்னிடம் சேர்ந்திருக்கும் செல்வம், ஊர் நடுவில் எல்லோருக்கும் பயன்படும்

எனது பார்வையில் அமெரிக்கா!

கிணறு நீர் நிரம்பியது போன்ற நன்மை செய்யக்கூடியது எனவே தாராளமாக எல்லோருக்கும் உதவு. மருந்துக்காக தன்னையே தரும் மருத்துவ மரம் போல உன்னிடம் உள்ள எதையும் பொது நலனுக்காகக் கொடு. தப்பில்லை.

Difficult days என்பது போல கொஞ்சம் இடறு நேரும் காலங்கள் ஆனாலும் உன் தொண்டாற்றும் மனதைத் தளரவிடாதே.

என்றெல்லாம் சொல்லிவிட்டு கடைசியாக மேலே சொன்ன குறளைச் சொல்கிறார் ஐயன்.

தொண்டாற்றுவதால் கேடு வருவது போல் இருந்தால் விலை கொடுத்து கூட அந்த அந்தத் துன்பத்தைப் பெறலாம் என்று முடிக்கிறார்.

தன்னலமின்றி தமிழுக்காக தங்கள் நேரம், உழைப்பு, அறிவு என இயன்றதையெல்லாம் கொடுக்கும் தமிழ்ச் சங்கத்தாருக்கும் தமிழாசிரியர்களுக்கும் இக்குறளை மேற்கோளிட்டு பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்.
உங்களது இந்தத் "துன்பம்" பெரிதும் மதிக்கப்படும் ஒன்று.

வாழ்க தமிழ். வாழிய தமிழுக்கு உழைக்கும் உங்கள் நல்லுள்ளம், தொண்டுள்ளம்.

எழுதியவர்: உள்ளூர்க்காரன்

கடிலக்கரையினிலே - பண்ருட்டி பலாச்சுளைகள் - 5

குள்ளக் குள்ளனே
குண்டு வயிறனே
வெள்ளிக் கொம்பனே
விநாயக மூர்த்தியே!

முத்தையர் பள்ளியில் 'ரெண்டாவது ஈ' வாத்தியார் சொல்லிக் கொடுத்தது. இன்றும் எந்த பிள்ளையார் சன்னிதியில் நின்றாலும் மனதுக்குள் சொல்லும் பாட்டு. உனக்கு பிடித்த குருவை நினைத்துக் கொள் என்று சொன்னால் முதலில் நினைவுக்கு வருவது தங்கராசு வாத்தியார்தான். முத்தையர் பள்ளியில் ஆசிரியர்களை பெயர் சொல்லிக் குறிப்பிடுவதில்லை. ரெண்டாவது ஈ வாத்தியார், மூனாவது சி டீச்சர், நாலாவது டீ வாத்தியார், இப்படித்தான். இங்கே கிண்டர்கார்டனில் பிள்ளைகள் டீச்சரை மிஸஸ் வாட்ஸன் என்று அழைப்பதைப் பார்த்து அதிர்ந்தவன் நான். இன்றும் அவசரத்தில் பெயர் மறந்து 'உங்க கணக்கு சார்' என்று என் மனைவி சொல்லும்போது பிள்ளைகள் சிரிப்பாய் சிரிக்கிறார்கள்.

நான் படிக்கும்போது பண்ருட்டியில் சில ஆரம்பப் பள்ளிகள்தான் இருந்தன. ஊருக்கு கிழக்குப் பக்கம் இருப்பவர்கள் முத்தையர் பள்ளியில் - முத்தைஸ்கூல்! ஊருக்கு மேற்குப் பக்கம் இருப்பவர்கள் ஏ.வி. ஸ்கூலில். நானும், நம் வெங்கட் செட்டியார் மாமனாரும் படித்தது முத்தைஸ்கூலில். ஒரே சமயத்தில் அல்ல. கான்வென்டில் படிக்க ஆசைப்படுபவர்கள் பாலவிஹார் ஆங்கிலப் பள்ளியில் அல்லது மஹேஸ்வரி நர்சரியில் காசு கட்டிப் படிப்பார்கள். இன்னும் சில மிகவும் சின்ன துவக்கப் பள்ளிகள் இருந்தன. மணிவாத்தியார் ஸ்கூல், நகராட்சிப் பள்ளி... நானும் மஹேஸ்வரியில்தான் ஆரம்பித்தேன். அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் கிடையாது, அங்கே படித்தால் ஹைஸ்கூல் போக முடியாது என்று கிளம்பிய புரளியால் அப்பா என்னை முத்தைஸ்கூலுக்கு மாற்றி விட்டார். கான்வெண்டில் தொடர்ந்திருந்தால் இந்நேரத்துக்கு முதல்வர் ஆகியிருக்கலாம். விதி!

முத்தையர் பள்ளியில் ஒன்னாங்கிளாஸில் இருந்து எட்டாவது வரை உண்டு. ஆனால் வெகுசிலர்தான் எட்டாவது வரை முத்தையரிலும் ஏவி ஸ்கூலிலும் தொடர்வார்கள். மற்றவர்கள் ஐந்தாவதுக்குப் பிறகு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாறி விடுவார்கள்.

'ரெண்டாவது ஈ'க்கு வருவோம். ஆங்கிலப் பள்ளியில் படித்துவிட்டு தமிழ்ப் பள்ளிக்கு வரும்போது நிறைய மாற்றங்கள். தரையில் உட்காருவது, இன்னமும் சிலேட்டில்

எழுதுவது, மதிய உணவு, மற்ற வகுப்பு மற்றும் தெருத் தோழர்களோடு கும்பல் கும்பலாக மாந்தோப்பில் உட்கார்ந்து சாப்பிடுவது, மாந்தோப்பை கண்காணிக்கும் 'சோவை'க்கு தெரியாமல் மாங்காய் அடிப்பது, லேட்டாய் ப்ரேயருக்கு வந்தால் டிரில் மாஸ்டரிடம் அடி வாங்குவது, மதிய உணவுத் திட்டத்தில்(பெருந்தலைவருடைய திட்டம், புரட்சித் தலைவருடையது அல்ல) சாப்பிட்டுவிட்டு சுத்தம் செய்யாமல் போயிருப்பார்கள் - நம்முடைய இடத்தில் அந்த கோதுமை சாதப்பருக்கைகளை சுத்தம் செய்வது, கரியும் கோவையிலையையும் கலந்து அரைத்து போர்டுக்கு கரி பூசுவது, மணியடித்தவுடன் பழி வாங்க வெளியே காத்திருக்கும் வீரமிக்க மாணவ மணிகளிடம் இருந்து தப்பிப்பது என்று பலவிதமான அனுபவங்கள், சாகசங்கள்.

ரெண்டாவதில்தான் வீரட்டன் எனக்கு அறிமுகமானான். அவன் கூட நான் ரெண்டாவது மட்டும்தான் படித்தேன். ஆனாலும் தொடர்ந்து பழக்கத்தில் இருந்தோம். இன்றும் பண்ருட்டி போனால் அவசியம் சந்திக்கும் ஒரு சிலரில் வீரட்டனும் ஒருவன். பண்ருட்டி பக்கத்தில் இருக்கும் திருவதிகை பாடல் பெற்ற ஸ்தலம் அதைப் பற்றி பிறகு விளக்கமாக கூறுகிறேன். அந்தக் கோவிலில் இருப்பது வீரட்டேஸ்வரர். அந்தப் பெயர்தான் வீரட்டனின் முழுப்பெயர். வீரட்டேஸ்வரன்! அந்தக் கோவில் எங்கள் தாத்தா கட்டியது என்றெல்லாம் ரீல் விட்டு நம்ப வைத்தான். அந்தக் கோயில் தஞ்சை பெரிய கோயிலுக்கும் முந்தியது!

வீரட்டன்தான் எனக்கு முதல் நண்பன். ஆங்கிலப் பள்ளியில் இருந்து வந்ததால் மற்ற மாணவர்களுக்கு ஏய்க்க நான்தான் கிடைத்தேன். அதுவும் ஆறுமுக ஆசாரிக்கு என் மீது 'பாசம்' கொஞ்சம் கூடவே ஜாஸ்தி. திட்டு, அடி, உதை, கிள்ளு, கொட்டு என்று வாரி வழங்கிக் கொண்டிருந்தான். வீரட்டன் நிறைய தடுக்கப் பார்ப்பான். ஒன்றும் நடக்காது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து 'அஞ்சாவது ஏ'யில் இருக்கும் என் அண்ணனிடம் சொல்லி ஒரு நாள் அழைத்து வந்தேன். வீரமாக வந்த அண்ணன் ஆறுமுக ஆசாரியைப் பார்த்து விட்டு சும்மா போய் விட்டான். எனக்கு ஒரே கடுப்பு. வீட்டுக்கு வந்து சண்டை போட்டேன் என்னடா பயந்துட்டியா என்று. அண்ணன் சொன்னான் அந்தப் பையன் தாயில்லாப் பையன், அடிக்க மனசு வரலை. அண்ணன் அடிக்காததாலோ ஏனோ அதிலிருந்து ஆறுமுக ஆசாரி நண்பனானான். வகுப்பு லீடர் மாபெரும் ரவுடி சுப்பிரமணிக்கும் ஏனோ என் மீது பாசம். அந்தக் காலத்தில் சினிமா பட பிலிம்கள் - நெகட்டிவ்கள் தான் கலெக்டர் ஐட்டம். ஒற்றை ஒற்றையாக இருக்கும். அபூர்வமாக சிலர் சுருள் சுருளாக வைத்திருப்பார்கள். நிறைய

பேருக்கு எம்ஜியார் பட பிலிம்கள்தான் பிடிக்கும். நான் சிவாஜி பாசறை. சுப்பிரமணி சிவாஜி பிலிம்களை அழிக்காமல் எனக்கு அவ்வப்போது கொடுப்பான். எப்போதாவது சண்டை போட்டால் என் கண் எதிரே சிவாஜி பிலிம் ஒன்றை கிழித்துப் போடுவான். என்ன தண்டனைடா சாமி!

தங்கராசு வாத்தியார் ரொம்ப அமைதியானவர். கொஞ்சம் குண்டாக இருப்பார். அதனால் சில பெரிய வகுப்பு மாணவர்கள் இட்லிப்பானை என்பார்கள். ஆனால் என் வகுப்பில் அனைவருக்கும் அவரைப் பிடிக்கும். எப்போதாவதுதான் அடிப்பார். லீவ் எடுக்கும்போது அப்பா ஆங்கிலத்தில் லெட்டர் எழுதிக் கொடுப்பார். அதை தங்கராசு வாத்தியார் நிறைய நேரம் ஏனோ படித்துக் கொண்டேயிருப்பார். மற்ற மாணவர்கள் சாருக்கு இங்கிலீஷ் தெரியாது என்று கிசுகிசுப்பார்கள். தெரியாமலில்லை. எதுக்குடா பெங்களூர் போற என்றோ யாருக்கு கல்யாணம் என்றோ படித்துத் தெரிந்துகொண்டுதான் கேட்பார். ஏன் அவ்வளவு நேரம் படிப்பார் என்பது இதுவரை புரியாத புதிர்.

எழுதியவர்: நாகு பரசு

வணிக ஆதரவாளர்களுக்கு நன்றி!

எனது பார்வையில் அமெரிக்கா!

எனது பார்வையில் அமெரிக்கா

எஸ். கண்ணன்

பாசத்தால் இணைந்த கதம்பம் வாசகர்களுக்கு எனது பணிவான சிரம் தாழ்ந்த வணக்கங்கள். இங்கே என் கண்ணில் காணும் காட்சிகளும் கேள்விப்படும் செய்திகளும் பெருகிக் கொண்டே போவதால் என் பார்வையும் நீண்டு கொண்டே போகிறது. நீங்கள் விரும்பும் வரையில் இது தொடரும்.

நமது முன்னோர்கள் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொல்வார்கள். இருந்தாலும் முப்பது வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் குடியேறிய நம்மவர்க்கு இங்கே இந்து கோவில்கள் இல்லையே என்ற மனக்குறை இருந்து வந்தது. ஆனால் அந்த குறையைப்போக்கிட அநேக இறையன்பர்கள் இந்துக்கள் என ஓரணியில் இணைந்து ஒன்றுபட்டு பாடுபட்டுப் பணம் சேகரித்து அரசின் அனுமதியுடன் இன்று வாஷிங்டன், பிட்ஸ்பர்க், நாலே (கேரி) போல இன்னும் பற்பல நகரங்களில் ராஜ கோபுரங்கள் கம்பீரமாக காட்சியளிக்க கோவில்களைக் கட்டியுள்ளனர். இவர்தம் தீவிர பக்திக்கு இவைகளே சான்றுகள். அண்மையில் இந்த மாதம் நாலே - கேரி என்னுமிடத்தில் சிவா - விஷ்ணு ஆலயத்தில் ஏழு அடுக்கு ராஜ கோபுரம் அமைத்து மிகவும் சிறப்பாக குடமுழுக்கு விழா நடத்தியுள்ளார்கள்.

அடுத்து நமது ஊரில் மிக அழகாகக் கட்டப்பட்ட சாய்பாபா கோவில், HCV - HINDU CENTRE OF VIRGINIA ஆகிய இரண்டு கோவில்களுக்கும் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இதில் சாய்பாபா கோவில் கிட்டத்தட்ட,

= ௨ =

பத்து ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவில் இயற்கை அன்னையின் எழில் பொங்கும் அழகுடன் மிகவும் தூய்மையுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சன்னதியும் சோலைகள் நடுவே ரம்மியமான அழகுடன் பக்திப் பரவசம் ஏற்படும்படி அமைத்துள்ளனர். HCV கோவிலில் அமைக்கப்பட்ட சிலைகள் அனைத்தும் தெய்வாம்சத்துடன் கலையழகு மிளிர பக்திரசம் ததும்பும் வண்ணம் உள்ளன. இரண்டு கோவில்களுக்கும் வரும் ஆன்மீக அன்பர்கள் பொறுமையுடன் அமைதி காத்து வணங்கிச் செல்லும் நேர்த்தியை பார்த்ததுமே, எனக்கும் மனதில் இறைவனிடம் வேண்டிக் கொண்டவை நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்த கோவில்களில் நான் கண்ட இன்னொரு மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவெனில் ஆண்டவனை அருகிலே பார்த்து தரிசிக்க கட்டணம் ஏதுமில்லை. மற்ற செய்திகளைப் போல, பக்தி மார்க்கத்திலும் எங்கள் வழி தனிவழி என்று இவர்கள் காட்டிவிட்டார்களே என்று வியந்தேன். ஆலய நிர்வாகிகளிடம் என் பாராட்டுதலையும் தெரிவித்தேன்.

நமது மக்கள் வழக்கமாகக் கொண்டாடும் விழாக்களைத் தவிர வேறு ஏதாவது புதுமையான விழாக்கள் இங்கே நடக்கின்றனவா என்று ஆராயும் போது

-3-

எனக்கு SWEET 16 மற்றும் பள்ளி முடிந்து கல்லூரி செல்லும் விழா என இரண்டு விழாக்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் விழாக்கள் அவசியம் தானா என்ற கேள்வி அவ்விழாக்களுக்குச் செல்வதற்கு முன்பு என் மனதில் எழுந்தது. அவ்விழாக்களை ஏற்பாடு செய்த பெற்றோர்களைப் பார்த்து இவைகளைக் கொண்டாடும் நோக்கமென்ன என்று கேட்டதற்கு அவர்கள் சொன்ன பதில் என்னை சற்றே உலுக்கிவிட்டது. இந்த விழாக்கள் இளைஞர்களை ஊக்குவிக்கும் விழாக்கள். பள்ளிப்படிப்பு முடிந்து கல்லூரிக்குச் செல்கிறாய். கவனமாகப் படி. இனி நீ சின்னப் பிள்ளையல்ல. வாலிபனாகிவிட்டாய். அதற்கேற்ப உன் செயல்கள் மாற வேண்டும். உன்னுடைய வளர்ச்சியை ஊரே உற்றுநோக்குகிறது. விழாவில் அவர்களைப் பலர் பாராட்டும் போது இன்னும் நாம் அதிகம் சாதிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையும், மன உறுதியும் அவர்களுக்கு ஏற்படும்" என்றார். கேளிக்கைகள் நிறைந்த இவ்விழாக்களில் இவ்வளவு நல்ல நோக்கங்கள் அடங்கியிருக்கும் என நான் நினைக்கவில்லை. தொடரட்டும் விழாக்கள்! வளரட்டும் தன்னம்பிக்கைத் தளிர்கள்!!

என் பேரன் வர்ஜீனியா டெக் (VIRGINIA TECH) என்ற கல்லூரியில் கணினிப் படிப்பில் முதலாண்டு முடிந்து இரண்டாம் ஆண்டு கல்லூரிக்குச் செல்கிறான். அவன்

= 4 =

என்னிடம் மிகவும் பாசத்துடன் பழகுவான். அவன் என்னையும் கல்லூரிக்கு உடன் அழைக்க எனக்கும் அவன் கல்லூரியைக் காண ஆசை துளிர்விட எங்கள் கார் பிளாக்ஸ்பர்க் (BLACKSBURG)-ல் உள்ள கல்லூரிக்கு விரைந்தது. அந்தக் கல்லூரி ஏறத்தாழ 300 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. 40,000 மாணவர்கள் பயில்கின்றனர். பேரனின் விடுதி அறைக்கு சென்றோம். அந்த அறை அனைத்து வசதிகளும் கொண்ட இருவர் தங்கும் அறை. இங்கு ஹாஸ்டலில் பெண்கள் பகுதி, ஆண்கள் பகுதி என்ற பிரிவுகள் இல்லை. எல்லாம் ஒரே வரிசையில்தான் உள்ளன. இதைக் கேட்டதும் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அடுத்து என்னைத் திடுக்கிடச் செய்த ஒரு தகவல் - இங்கே, கல்லூரியின் இலக்கணமாக விளங்கும் "ராக்கிங்" என்பது துளிக்கூட கிடையாதாம். இதைக் கேள்விப்பட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை. ராக்கிங் இல்லாத கல்லூரியா!! இறுதியாக கல்லூரியில் பேரனிடம் பிரியாவிடை பெற்றபோது இருவரது கண்களுக்கிடையே நிகழ்ந்தது கண்ணீர் பரிமாற்றம்.

எஸ். கண்ணன்
F/o. வெங்கடேஸ்வரன் கண்ண

(பார்வை தொடரும்)

சின்னக்கண்ணன் சிரிக்கிறான்.

எங்கள் சின்னக்கண்ணன் சிரிக்கிறான்
என் சிரிப்பில் உலகமே அடக்கமென சிரிக்கிறான்
சிந்தையும் நான்தான் செயலும் நான்தானே!
கண்டதை நினைத்து கவலைப்படாதே மானிடா

அண்டப் பேருலகில் அனைத்துமே நான்தானே
உண்பது செரிப்பதுகூட உன்கையில் இல்லையடா?
கண்டதை நினைத்து கவலைப்படாதே மனிதா
கடமையைச் செய்துவிடு பலனை நான் தருவேன்

நீ உள்வாங்கும் மூச்சு வெளிவராவிடில் போச்சு
கிடைப்பட்ட வாழ்க்கையிலே ஏனிந்த ஆட்டம்
நற்செயலே செய்துவிடு நற்புண்ணியம் சேர்த்துவிடு
என்பாதம் வந்தடைய அதுவொன்றே பாதையப்பா!!

S. கண்ணன், நொளம்பூர் - Temp at USA
படத்தில் என் பேரன் - வெங்கடேஸ்வரன் கண்ணன்.

படைப்பு: வெங்கடேஸ்வரன் கண்ணன்

Darlings (ஹிந்தி)

ஆலியா பட் தயாரித்து (இணை தயாரிப்பு) நடித்திருக்கும் படம். குறைந்த பட்ஜெட்டில் முக்கிய நடிகர்களின் நிறைவான நடிப்பில் நெட்ஃபிளிக்ஸில் வந்திருக்கிறது.

சமீப காலமாக ஹிந்தி படவுலகிலிருந்து அவல நகைச்சுவைப் (dark comedy) படங்கள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. தமிழில் மூடர் கூடம், சூது கவ்வும் படங்களைச் சொல்லலாம். ஆனால் இதில் தீவிரமான தலைப்பான குடும்ப வன்முறையைக் (domestic abuse) கதைக்களனாகக் கையாண்டிருக்கிறார் அறிமுக இயக்குநர் ஜஸ்மீத் ரீன்.

காதலித்துத் திருமணமான ஒரிரு வருடங்களிலேயே கணவனின் கோரமுகம் தெரிய வருகிறது பத்ருவிற்கு (ஆலியா). கணவன் ஹம்சா (விஜய் வர்மா) தினந்தோறும் இரவில் குடித்து விட்டு வந்து ஒண்ணுமில்லாத விஷயத்திற்கெல்லாம் அடிப்பதும், விடிந்தவுடன் கண்ணீர் மல்க மன்னிப்பு கேட்பதும், பத்ரு மன்னிப்பதும் அவர்கள் வாழ்வில் வாடிக்கையாகிறது. அடிக்கடி தெரியும் அபாய விளக்குகளையும், அருகே வசிக்கும் தன் அம்மா ஷம்சுனின் (ஷெஃபாலி ஷா) எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாது, ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகி விடும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறாள் பத்ரு. ஆனால் அந்த நம்பிக்கையையும் சிதைக்கும் வகையில் ஒரு சம்பவம் நடக்கிறது. பிறகு என்ன ஆகிறது என்பதுதான் மிச்சக் கதை.

பாலிவுட்டின் நெபோடிச (nepotism) குற்றச்சாட்டிற்கு ஆளானவர்களில் ஆலியா பட்டும் ஒருவர் (தந்தை மகேஷ் பட் பிரபல இயக்குநர்/தயாரிப்பாளர்). ஆனால் அதையும் தாண்டி திறமை இருந்தால்தான் நிலைக்க முடியும் என்பதை இந்தப் படத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார். அதே போல் ஷெஃபாலி ஷாவும் விஜய் வர்மாவும் தேர்ந்த நடிப்பை வழங்கி இருக்கிறார்கள். தாய்-மகள் இடையேயான காட்சிகள் புன்னகையை வரவழைக்கும் வகையில் இயல்பாக இருக்கின்றன. மற்ற துணைக் கதாபாத்திரங்களான ரோஷன் மாத்யூ (இவரை மலையாளப் படங்களில் பார்த்திருக்கலாம்), போலீஸ் இன்ஸ்பெக்டர், ரயில் நிலையத்தில் ஹம்சாவின் மேலதிகாரி ஆகியோர்களின் நடிப்பும் நன்றாக இருக்கிறது.

பிற்பாதியில் அவல நகைச்சுவையிலிருந்து அபத்த நகைச்சுவையை நோக்கிப் பயணிப்பது படத்தின் மிகப் பெரிய பலவீனம்.

எழுதியவர்: ரவி திருவேங்கடத்தான்

தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

நிலை 4 வகுப்பு மாணவர்கள்
ஆசிரியை: சங்கீதா வெங்கடேசன்
தலைப்பு: இந்தியாவின் நதிகள்

மாணவர்கள் பட்டியல்

- கீர்த்திசாய்ஜனனி இளமாறன்
- மிருதுளா பிரிதிவிராஜ்
- கவின் ரமேஷ்குமார்
- சாத்விக் வில்லடியான்
- ஆராதியா வெங்கடாசலபதி
- நேஹா நரேஷ்குமார்
- சோமேஸ்வர் சிவச்சந்திரன்
- நிசாந்த் கிருஷ்ணகுமார்

தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

வைகை ஆறு

— மதுரை

— கீர்த்தி இளமாற
நிலை 4



குறிப்புகள்

வைகை ஆற்றின் பிறப்பிடம் மேகமலை. இதன் நீளம் 258 கி.மீ ஆகு
வைகை ஆறு வெள்ளிமலையில் தான் உற்பத்தியாகிறது.
இந்த ஆறு பல இடங்களை அடைந்து மதுரை மாநகர் வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவின் பாக்கு நீரிணையில் கலக்கிறது.
சுருளியாறு, தேனியாறு, மஞ்சளாறு, நாகலாறு, சிறுமலையாறு முதலியவை வைகையின் துணை ஆறுகளாகும்.
மதுரையில் கொண்டாடப்படும் "சித்திரை திருவிழாவிற்கும்" வைகை ஆற்றிற்கும் மிகுந்த தொடர்புண்டு.
மதுரை மீனாட்சி அம்மனின் திருக்கல்யாணத்தை காண வ அழகர் வைகை ஆற்றில் இறங்கி வரும் போது திருமணம் முடிந்துவிட்டது.
வைகை ஆற்றிலிருந்த படியே மீண்டும் தன் இருப்பிடம் சென்று விடுவார்.
அதுப்போல உணவு உண்ண வந்த குண்டோதரனின் தாகத்தை அடக்க சிவபெருமான் வைகையைப் பயன்படுத்தியதாகவும் கூறுவர்.
இப்போது வைகை ஆறு பல பிரச்சனைகளை சந்திக்கிறது.
மணல் கொள்ளை, தென்னை மரங்களை அழித்தல், இலங்களை அழித்தல், விவசாய பயிர்களை அழித்தல், கழிவுநீர் கலக்கல் போன்ற இன்னல்களிலிருந்து வைகை ஆறு மாசு படாமல் மீட்க நாம் பாடுபட வேண்டும்.

கீர்த்திசாய்ஜனனி இளமாறன்

காவிரி ஆறு

"வான் பொய்யினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி"

காவிரியை பொன்னி ஆறு என்றும் கூறுவர்.

இது கர்நாடக மாநிலத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள குடகு மாவட்டத்தைச் சேர்ந்த தலைக்காவேரி என்ற இடத்தில் தோன்றுகிறது. 800 கி.மீ கடந்து பூம்புகார் என்னும் இடத்தில் வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது.

காவிரி ஆறு பாகமண்டலம் என்னும் இடத்தில் முதல் முறையாக பூமிக்கு வெளியில் தோன்றுகிறது.

இவ்விடத்தில் கன்னிகை மற்றும் சுயஜோதி என்னும் ஆறுகள் இணைந்து திருவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கப்பட்டிணம், சிவன் சமுத்திரம் மற்றும் ஸ்ரீ ரங்கம் ஆகிய மூன்று தீவுகளை கொண்டது. ஐந்து அணைகள் மற்றும் பல தடுப்பணைகளும் கொண்டது. இரண்டு அருவிகளும் பல துணை ஆறுகள் கொண்டது.

பொங்கி வரும் காவிரியே! நம் மக்களின்
ஜீவ நதி!

மிருதுளா பிரிதிவிராஜ்


காவேரி ஆறு
காவேரி ஆறு இந்தியாவின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது குடகு மாவட்டத்தைச் சேர்ந்த தலைக்காவேரி என்ற இடத்தில் தோன்றுகிறது. இதன் நீளம் 800 கி.மீ. ஆறு பாயும் முக்கிய நகரங்கள்: குடகு, ஹாசன், மைசூர், பெங்களூர், சேலம், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, மாயவரம். இது பூம்புகார் வழியாக வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது.
முக்கிய துணை ஆறு: கபினி, ஹேமாவதி, ஹாரங்கி, ஆர்க்காவதி, கிம்சா, சொர்ணவதி, பவானி, அமராவதி, நொய்யல், மணிமுத்தாறு
அணைகள்: கிருஷ்ணராஜ சாகர், மேட்டூர் ஸ்டான்லி, கரிகாலன் கல்லணை, மேலணை.
வரலாறு: இதன் வழிதடங்களில் பல முக்கிய வழிபாடு மற்றும் பண்டைய நாகரிகங்கள் காணப்படுகின்றன.
பயன்பாடு: காவிரி நீரானது பாசனத்திற்காகவும் மக்களின் அன்றாடத் தேவைகளுக்காகவும் நீர் மின் உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.
நடந்தாய் வாழி காவேரி

கவின் ரமேஷ்குமார்



பவாணி ஆறு

- பவானி ஆறு, காவிரி ஆற்றின் முக்கிய துணை ஆறுகளில் ஒன்றாகும்.
- இது தமிழகத்தின் நீலகிரி மலைத்தொடரில் உள்ள குந்தா மலைப்பகுதியில் தென்மேற்கு மேலை முகட்டில் உருவாகிறது.
- தென்மேற்காக கேரள மாநிலத்தின் பாலக்காடு மாவட்டத்திலுள்ள அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாய்கிறது.
- மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆறு சமவெளியை அடைகிறது. பின் கோபிச்செட்டிப்பாளையம் வழியாக பாய்ந்து பவானி நகரில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது.
- சிறுவாணி, குந்தா, மோயார், ஆகிய ஆறுகள் பவானி ஆற்றுடன் இணைந்து கொள்கிறது.
- பவானி சாகர் அணைக்கட்டு சத்தியமங்கலம் பகுதியிலும் கொடிவேரி அணைக்கட்டு கோபிச்செட்டிபாளையத்திலும் அமைந்துள்ளது.

சாத்விக் வில்லடியான்

நொய்யல் ஆறு!

நொய்யல் ஆறு கோவை மாவட்டத்தில், வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உருவெடுக்கிறது. இது மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரில் உருவாகி கிழக்கு நோக்கி செல்கின்றது. 180 கிலோ மீட்டர் பயணித்து கரூர் அருகே நொய்யல் கிராமத்தில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது.

தோற்றம் :-

நொய்யல் ஆறு கோவையின் மேற்கு தொடர்ச்சி மலையில் ஏறத்தாழ 20 க்கும் மேற்பட்ட ஓடைகள் ஒன்று சேர்ந்து தொம்பிலிபாளையத்தில் பெரும் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் 10 மாதம் வரை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். இந்த ஆறு கொங்கு மண்டலத்தின் அடையாளமாக திகழ்கிறது.

நீர் மேலாண்மை:-

கொங்கு மண்டலத்தை ஆண்ட சோழர்கள் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு

ஆற்றில் கலப்பதை தடுத்தல் மட்டுமே நொய்யல் ஆறு மீண்டும் உயிர் பெறும். நீர் நிலைகளை பாதுகாப்போம்! நலம் பெற வாழ்வோம்!! நன்றி!!

ஆராதியா வெங்கடாசலபதி

தமிழ்ப்பள்ளி மாணவர்கள்



பாலாறு

பாலாறு, நந்தி மலையில் தொடங்குகிறது.
கர்நாடகா, ஆந்திர மாநிலங்கள் கடந்து
நம் தமிழ்நாடு வந்து பாய்ந்தோடுகிறது.
வேலூர் மாவட்டம் முதல் காஞ்சிபுரம்
மாவட்டம் வரை பாய்ந்து வங்கக்கடலில்
கலக்கிறது. ஒருசிறிய ஊற்றாக உருவாகி சிறு
சிறு ஓடைகளாக ஓடிப்பின் பருவ
மழையால் பெருக் கெடுத்து, பெரிய
நதியாகி, செல்லும் இடமெல்லாம்
வளம்செழிக்க வைக்கிறது. அதிக
தூரம் நம் தமிழகத்தில் பயணித்து
பலனளித்து சிறப்பிக்கிறது. வரலாற்றில்
பலசிறப்புகள் பெற்று பல புலவர்களால்
பாடப் பெற்று இன்றும் நமக்கு
பல வகையில் உதவியாக இருக்கிறது
ஆதனால் வரட்சி காலங்களில்
நாம் அதனை நன்கு பேணி பாதுகாக்க வேண்டும்.

நேஹா...

நேஹா நரேஷ்குமார்

சமர்ப்பிக்கப்பட்டது - சோமேஸ்வர் சிவச்சந்திரன்

கங்கை நதி

கங்கை இந்தியாவில் அமைந்துள்ள மிக முக்கியமான நதி. இது இந்தியாவின் தேசிய நதி. பாகீரதி நதி உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள கங்கோத்ரியில் இருந்து வந்து தேவபிரயாகில் உள்ள அலக்நந்தா நதியில் கலந்து கங்கையை உருவாக்குகிறது. கங்கை 2525 கிலோமீட்டர்கள் ஓடுகிறது.



ரிஷிகேஷ், ஹரித்வார், அலகாபாத், வாரணாசி, பாட்னா மற்றும் கொல்கத்தா ஆகியவை கங்கையை ஒட்டி அமைந்துள்ளன. வங்காளதேசத்தில் கங்கை பத்மா நதி என்று அழைக்கப்படுகிறது. கங்கை இந்துக்களின் புனித நதி. இது கங்காதேவி என்றும் போற்றப்படுகிறது.



கங்கை 2007 இல் ஐந்தாவது மிகவும் மாசுபட்ட நதியாகும். மாசுபாடு மக்களுக்கு மட்டுமல்ல, நதியில் வாழும் விலங்குகளுக்கும் ஆபத்தானது. கங்கை நதியை சுத்தப்படுத்தும் திட்டம் இருந்தது, ஆனால் அது முற்றிலும் தோல்வியில் முடிந்தது.

கங்கை உத்தரபிரதேசம் மற்றும் பீகார் வழியாக சென்று 2 ஆறுகளாக பிரிந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இந்த இரண்டு நதிகளும் ஹூக்ளி மற்றும் பத்மா என்று அழைக்கப்படுகின்றன.

கங்கையின் ஒரு பகுதியாக இருப்பதால் பாகீரதி நதி முக்கியமானது. இந்து புராணங்களில் கங்கை பூமிக்கு வர சூரிய குலத்தைச் சேர்ந்த பகீரதன் காரணம் என்று கூறப்படுகிறது.

சோமேஸ்வர் சிவச்சந்திரன்

தமிழ்ப்பள்ளி மாணவர்கள்



நிசாந்த் கிருஷ்ணகுமார்

முடக்கு வாதம் Vs கீல்வாதம்
கைகள், அறிகுறிகள் மற்றும் சிகிச்சை

முடக்கு வாதம் (Rheumatoid arthritis) மற்றும் கீல்வாதம் (Osteoarthritis) ஆகியவை வெவ்வேறு வகையான மூட்டுவலிகள். அவைகள் சில பண்புகளில் ஒத்திருந்தாலும், அவற்றின் அறிகுறிகள் மற்றும் சிகிச்சைகள் மாறுபட்டவை. எனவே துல்லியமான நோயறிதல் முக்கியமானது. கீல்வாதத்துடன் ஒப்பிடும்போது முடக்குவாதம் பத்தில் ஒரு பங்கு மக்களையே பாதிக்கிறது. கீல்வாதம் மற்றும் முடக்கு வாதம் ஆகியவற்றுக்கு இடையேயான முக்கிய வேறுபாடு மூட்டுவலி ஏற்படுவதற்கான காரணமே ஆகும். மூட்டுகளில் ஏற்படும் இயந்திர தேய்மானத்தால் கீல்வாதம் ஏற்படுகிறது. முடக்கு வாதம், உடலின் சொந்த நோயெதிர்ப்பு அமைப்பே மூட்டுகளைத் தாக்கும் ஒரு நோயால் உண்டாகிறது.

முடக்கு வாதம் மற்றும் கீல்வாதம் ஆகியவற்றின் பண்புகள்

பண்பு	முடக்கு வாதம்	கீல்வாதம்
தொடங்கும் வயது	இது வாழ்க்கையின் எந்த நேரத்திலும் தொடங்கலாம்.	இது பொதுவாக வாழ்க்கையின் பிற்பகுதியில் தொடங்குகிறது.
பாதிப்பு தொடங்கும் வேகம்	ஒப்பீட்டளவில் விரைவாக, வாரங்கள் முதல் மாதங்கள் வரை	மெதுவாக, ஆண்டுக்கணக்கில்
மூட்டு அறிகுறிகள்	மூட்டு வலி, வீக்கம், மற்றும் கடினமானதல்.	மூட்டு வலி மற்றும் மென்மையாக இருக்கலாம், ஆனால் சிறிய அளவிலான வீக்கம் அல்லது வீக்கமில்லாமை.

உடல்நலக் குறிப்பு

பண்பு	முடக்கு வாதம்	கீல்வாதம்
மூட்டுகளை பாதிக்கும் முறை	இது பொதுவாக உடலின் இருபுறங்களிலும் (சமச்சீர் மூட்டுகளை) உள்ள சிறிய மற்றும் பெரிய மூட்டுகளை பாதிக்கிறது. இரண்டு கைகள், இரண்டு மணிக்கட்டுகள் அல்லது முழங்கைகள், அல்லது இரண்டு கால்களின் பந்துகள்.	அறிகுறிகள் பொதுவாக உடலின் ஒரு பக்கம் துவங்கி மறுபக்கத்துக்கு பரவுகிறது. அறிகுறிகள் படிப்படியாக தொடங்கி பெரும்பாலும் ஒரு தொகுப்பு மூட்டுகளை பாதிக்கும். விரல் நகங்கள் அல்லது பெருவிரலுக்கு நெருக்கமான மூட்டுகள், பெரிய எடைதாங்கி மூட்டுகள் (இடுப்பு, முழங்கால்கள்), அல்லது முதுகெலும்பு.
காலை நேர விரைப்புத் தன்மையின் கால அளவு	பொதுவாக நீண்ட காலம் நீடிக்கும், 1 மணி நேரத்திற்கும் மேலாக.	பொதுவாக 1 மணி நேரத்திற்கும் குறைவாக நீடிக்கும். நாள் முடிவில் அல்லது செயல்பாட்டின் காலத்திற்குப் பிறகு விறைப்பு திரும்பும்.
முழு உடல் பாதிப்பு அறிகுறிகள்	அடிக்கடி சோர்வு மற்றும் உடல்நலமில்லாதது போன்ற பொதுவான உணர்வு.	முழு உடல் அறிகுறிகள் இல்லை

தொகுப்பு - ராம்கி கவசேரி
தமிழாக்கம் - கவியரசன் அம்பேத்கார்

வாசகர் கருத்து

இந்த மாத கதம்பம் இதழைப் பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

முற்றும்



கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பயனுள்ள பல விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாகக் குழுவின் மனமார்ந்த நன்றிகள்.